[1992 ஏப்ரல் 24

540—

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு விடப்படும் தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க திட்டம்,

*4927— திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் அணைகளில் இருந்து விடப்படும் தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவரவர்களே.

(அ) மற்றும் (ஆ) ஆம், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள. பெருஞ்சாணி மற்றும் பேச்சிப்பாறை நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்திற்காக விடப்படும் நீரைப்பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களுக்கான ஆய்வுகள் முடிக்கப்பெற்று விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது,

திரு, இரா, நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தின் தேவை அதிகமாக இருப்பதன் காரணமாக பல வருடங்களாக இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நடவடிக்கை நடந்துகொண்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மிகச் சிறப்பாகக் கூறினார்கள். இதை கூடிய சீக்கிரமாக முடித்து மின் பற்றாக்குறையைப் போக்குகிற அளவில் திட்டத்தை விரைவில் முடிக்க அமைச்சர் முன்வருவாரா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பெருஞ்சாணி அணை புனல் மின்திட்டம் என்பது உலக வங்கி ஒப்புதலோடு நிறைவேற்றப் படுவதற்காக நடவடிக்கையில் இருந்து வருகிறது. இதன் மூலம் 4.7 மில்லியன் யூனிட் ஆக இருக்கும். அதனுடைய திட்ட மதிப்பீடு ஏறத்தாழ இரண்டரைக்கோடி ரூபாய். இதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு. உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல பேச்சிப்பாறை அணைத்

1992 ஏப்ரல் 24]

திட்டம் ரூ, 2 கோடியே 89 லட்சத்துக்கு தயாரிக்கப்பட்டு 2 × 650 கிலோவாட் உள்ள மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தையும் உருவாக்கியிருக்கிறோம், இதன் மூலம் 2.9 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தியாகும், இந்த இரண்டு திட்டங்களுக்கும் உலக வங்கியின் நிதி கோரப்பட்டுள்ளது, திட்ட முன்வடிவுகள் தயாரிக்கப்பட்டு ஆயத்த நிலையில் இருக்கின்றன, நிதியுதவி கிடைத்தவுடன் உடனடியாக இத்திட்டம் துவங்கப்படும்.

திரு. இரா. நடேசன் : பேரவைத் தலைவர் அவர்களே. நிதி உதவி கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டால் மாற்று வழியில் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியுமா? அதிக அளவுக்கு மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே, நிதியுதவிக்குக் காத்திராமல் நமது புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே அடுத்து வருகின்ற ஆண்டிலாவது இத்திட்டத்தை துவங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவி பெறும் திட்டத்தின் கீழ் இது சேர்க்கப்பட்டிருக்கிறது, ஆகவே நிதி பெறுவதில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது, உலக வங்கி நிதி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால் வேறொரு திட்டத்தைத் தயார் செய்து அதன் மூலமாக நிறைவேற்றப்படுவது இயலாத காரியம், ஆகவே இதையே கூடிய விரைவில் முடிக்க அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 541. திரு. எம். தங்கவேல் இருக்கையில் இல்லை.

வினா எண், 617. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப். திரு, வி,கே. சின்னசாமி. திரு, மா, சுந்தரதாஸ். திரு, ஆர், தங்கராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

617—

கூட்டுறவுத்துறை இளநிலை ஆய்வாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு,

*819— டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:

திரு. வி. கே. சின்னசாமி ;

திரு, மா, சுந்தரதாஸ் :

திரு. ஆர், தங்கராஜ்: